Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தேசிய தினசரி

மலர் 10

இதழ் 130

தபால்பெட்டி எண். 49

போன் 389

யாழ்ப்பாணம் 8லை ஆனி 7 ரபி: அவ் 23 வியாழக்கிழமை (20-6-68)



இன்றே விஜயம் செய்யுங்கள்

ம.சே.ஜதிராஜா

பல் கட்டுபவர் கண்பரிசோதகர்

9,மெயின் வீதி-யாழ்ப்பாணம்.

# ‘தனிநாடு’ கோரி புதிய கட்சி ஆரம்பிக்க தீவிர முயற்சி

## ஆதரவு கிடைப்பதாக தகவல்

யாழ்ப்பாணம், வியாழன்

தனித்தமிழ் நாடு கோரிக்கையை முன்வைத்து, இலங்கையில் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு தனியரசை அமைப்பதற்கு சிலர் முயற்சிமேற்கொண்டுள்ளனர். இருபெரும் தமிழ் அரசியல் கட்சிகளான தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளிலிருந்து விலகியவர்களும் விலக்கப்பட்டவர்களும், இடதுசாரிக் கட்சிகளிலிருந்து விலகியவர்களும் இந்தத் தனித்தமிழ் அரசுக் கொள்கையைக்கொண்ட ஒரு புதிய அரசியல் கட்சியை அமைக்க முயற்சி செய்துவருவதாகவும் இந்த முயற்சிக்கு ஆதரவு அதிகரித்துவருவதாகவும் இந்த முயற்சியிலீடுபட்டுள்ள வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

தேசிய ஐக்கியம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் உரிமைகள் நாளுக்கு நாள் பறிக்கப்பட்டு வருவதால் இனியும் தேசிய ஐக்கியத்தில் அதிக ஆசை வைக்க முடியாதென இவர்கள் கருதுகின்றனர்.

சமஷ்டி ஆட்சி அமைப்பு வேண்டுமெனக்கோரும்தமிழரசுகட்சிக்குநாட்டைப் பிரிக்கும் நோக்கம் இல்லையென்றாலும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அரசியல் வாதிகளும் தமிழரசுக் கட்சி நாட்டைப் பிரிக்கவே முயற்சி செய்வதாகக் கூறி வருவதால் இனியும்சமஷ்டி ஆட்சி கோருவதில் பயனில்லை என்ற அபிப்பிராயம் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே தோன்றியிருக்கிறதாம். 1958-ம் ஆண்டிலும் அதன் பின்னரும் கூட பலதடவைகளில் தமிழரசுக் கட்சிக் குழுக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் தனித் தமிழ் நாடு கோரும் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு வாபஸ் பெறப்பட்டதையும் இந்தப் புதிய கட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சென்றஆண்டு மாநாட்டிலும் தனித்தமிழ் நாடு அமைக்க வேண்டுமெனக் கொண்டு வரப்பட்ட பிரேரணை பின்னர் வாபஸ் பெறப்பட்டதையும் இப்பொழுது அந்தப் பிரேரணைக்கு அவசியமில்லையென்றும் அப்படியானதொரு சூழ்நிலை ஏற்பட்டால் தனித்தமிழ் நாடு கோரலாமென்றும், காங்கிரஸ் தலைவர் அந்த மகாநாட்டில் கூறியதையும் இந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

முன்னாள் வவுனியா எம். பி. யும், ஈழத்தமிழர் இனவிடுதலை இயக்கத் தலைவருமான திரு. செ. சுந்தரலிங்கம் பல்லாண்டுகளாக ஈழத் தமிழர் விடுதலை பற்றிக் குறிப்பிட்டு வருவதையும் சமீபத்தில் கூட அவர் தமிழர்கள் தங்கள் எதிர்காலம் பற்றி ஓர் உறுதியான முடிவுக்கு வருவதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லையெனத் தெரிவித்திருந்ததையும் இதேவட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மாவட்டசபை மசோதா பற்றியவெள்ளை அறிக்கை மீது மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி. நவரத்தினம் பேசுகையில் வெரு

(6-ம் பக்கம்பார்க்க)

## எம். பி.யின் முயற்சியால் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையும் மற்றும் பல சங்கங்களும் பெரியார்களும் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக வசாவிளான் பாதாள வயிரவர் கோயிலில் உயிர்ப் பலியிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இம்மாதம் 22-ந் திகதி நடைபெறவிருந்த வேள்வியைத் தடுப்பதற்காக சத்தியாக்கிரகம் செய்யவும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. ஆனல் ஆலய முகாமையாளர், காரியாதிகாரி மற்றும்பலரும் கலந்து கொண்ட ஒரு மகாநாட்டில் இக்கோயிலில் உயிர்ப்பலி இடுவதை உடனடியாக நிறுத்திக் கொள்வதென முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சத்தியாக்கிரக முயற்சி கைவிடப்பட்டது. இம்மகாநாட்டில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இம்மாதம் 22-ந் திகதி நடைபெறவிருந்த வேள்விப்பலியை நிறுத்துவதென்பதும் இனி இக்கோவிலில் உயிர்ப்பலி நடைபெற மாட்டாதென்பதும் ஒரு தீர்மானம்.

## ‘இலங்கையின் தேவையை வடபகுதி பூர்த்தி செய்யும்’

வவனியா, புதன்

உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமதரும் நோக்குடன் சின்னவெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலையை உயர்த்த வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்வாலிப இயக்கத் தலைவர் திரு. கோ. நடேசபிள்ளை உணவு அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:— வவுனியாவில்மட்டும்75000 அந்தர் சின்ன வெங்காயம் உற்பத்தியாகிறது. ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம்வரை உற்பத்தியாகும் சின்னவெங்காயத்தை பாதுகாத்து வைத்தால் 4 மாத தேவைகளை பூர்த்தி செய்யமுடியும்.

வவுனியா கிளிநெச்சி மன்னார் பகுதிகளில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தும் சின்ன வெங்காய உற்பத்தியில் கவனம்செலுத்தவில்லை பண்டகசாலைகளில் சேமித்து வைக்க இடவசதி இல்லை.

சின்னவெங்காய விளைச்சல் வவனியாவில் குறைந்துவிட்டது. சின்னவெங்காய உற்பத்தியாளருக்கு உதவ வேண்டும் வருடம் முழுவதும் வடமாகாணத்தில் சின்னவெங்காயம் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனல் இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் சமமான விநியோகிக்கபடவில்லை. அரசாங்கத்தின் முயற்சி இருக்குமானல் இலங்கையின் தேவையை வடபகுதி பூர்த்திசெய்யும்,

—

## இலவச படக்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

திருநெல்வேலி இந்துஇளைஞர் இயக்கத்தின் திறந்தவெளி அரங்கில்இன்றுமாலை 6-30மணிக்கு இலவசப்படக்காட்சி ஒன்று காண்பிக்கப்படும்.

## குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்பற்றிய பட்டியல் பொலிஸார் தயாரித்துள்ளனர்

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதியில் காடைத்தனங்களிலும் குற்றச் செயல்களிலும் ஈடுபடுபவர்கள் பற்றிய முழுப்பட்டியல் ஒன்றைபொலிஸ் தலைமைக் காரியாலயம் இப்போது தயாரித்துள்ளது.

தயாரிக்கப்பட்ட இப்பட்டியலின் படி1000க்கும்மேற்பட்டவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இதில் சுமார் 700க்கும் மேற்பட்டவர்கள் படித்த வாலிபர்களே என உயர்தரபொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொகுதிவாரியாக பிரிக்கப்பட்ட இப்பட்டியல் வடபகுதியிலுள்ள 14 பொலிஸ் நிலையங்களுக்கும் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு பகுதியிலும்இவ்வாரம் முதல்இதற்கென அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் பகுதியினர் இப்பட்டியலிலுள்ளவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வருவர். (கா.நி)

# நாகர்களுக்கு சீன உதவி - சீனவிடம் இந்தியா கடும் ஆட்சேபம்

புதுடில்லி, ஜூன் 19

நாகலாந்திலுள்ளதேசத்துரோகச் சக்திகளுக்கு உதவுவதன்மூலம் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் சீன ஈடுபட முயற்சி செய்வதாகவும், இத்தகைய நடவடிக்கைகளை இந்தியா பொறுத்துக்கொண்டிருக்க முடியாதென்றும் இந்தியா சீனவிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

நாகாலாந்து புரட்சிவாதிகளுக்குச் சீன ஆயுதங்கள், ஆயுதப்பயிற்சி ஆகியன அளிப்பதன்மூலம் சீன, இந்தியாவின் சுதந்திரத்துக்கும், சர்வதேச உறவு முறைகளுக்கும் எதிராக நடந்துகொள்வதாக இந்தியா, தனது ஆட்சேபக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்த ஆட்[illegible] இன்று காலை [illegible]லுள்ள சீனத் தூதரகப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

நாகாலாந்திலுள்ள பகைநாகர்களுக்குச் சீன ஆயுத உதவி அளித்திருப்பது சம்பந்தமாக இந்தியாவுக்குப் போதியசாட்சியம் கிடைத்திருப்பதாக அந்த ஆட்சேபக்குறிப்பில் இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இம்மாத [illegible]பகுதியில், பகைநாகா கோஷ்டி ஒன்று கைப்பற்றப்பட்ட போது, அவர்களிடம் சீனவில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், சிறுபீரங்கிகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டதாக இந்திய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

சீன ரேடியோவும், நவசீன செய்தித் தாபனமும் இந்தியாவின் ஒற்றுமைக்கும், உறுதிப்பாட்டுக்கும் எதிராகச்செய்துவரும் பிரசாரத்தை இந்திய ஆட்சேபக்குறிப்பு கண்டித்தது.

இந்தியாவுக்கெதிராக ஒரு சில சக்திகள் தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபடச் சீன இப்பிரச்சாரத்தைப் பயன்படுத்துவதாகவும், எல்லாத் தேசத்துரோக நடவடிக்கைகளையும் அரசாங்கம் முறியடிக்கும் என்றும் இந்தியா அந்த ஆட்சேபக் குறிப்பில் எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

நாம் வெளியில் பார்க்கும் நல்லதும் தீயதும் நம்மனதின் விளைவுகளே. உண்மையில் இமை என்பது உலகில் இல்லை. கடவுளிடம் சரணாகதியடைந்து எல்லாம் அவரது விருப்பத்தால் நடக்கிறதென்று உணர்ந்தால் நம் பழைய வினைகள் நம்மை ஒன்றும் செய்யா. மனம்என்றும் சாந்தியாக, திருப்தியாக, இன்பமாக இருக்கும்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

சாதிவ்லாசணம் கிலகவருஷம் ஆனி மாதம் 7-ந் திகதி (20-6-68)


## நாவலர் நினைவு

யாழ்ப்பாணம், சிதம்பரம், சென்னை இம் மூன்று இடங்களிலும் நாவலர் பெருமானின் சிலைகளை எழுப்புவதென்றும் அதற்காக ஒன்றரை லட்சரூபாய்நிதி திரட்டுவதென்றும் கொழும்பிலே பல தமிழன்பர்கள் கூடி தீர்மானித்து முதல் நாளன்றே இருபதாயிரம் ரூபாய் வசூலித்துவிட்டது மகிழ்ச்சியுடன் பாராட்டத்தக்கதாகும்.

சென்ற ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் விழாவிலே, தமிழ் வளர்த்தவர்களென்று கூறி பலருக்கு சிலை எழுப்பியவர்கள், தமிழுக்குப் புத்துயிர் கொடுத்து வளர்த்த நாவலர் பெருமானை மறந்துவிட்டது, ஈழத்தமிழருக்கெல்லாம் பெரும் வேதனையும் ஏமாற்றமும் அளித்தது. தமிழக முதல் அமைச்சரிடம் இதைப் பற்றிக் கேட்டபோது, நாவலர் பெருமானிடம் தங்களுக்கும் பெருமதிப்பு உண்டென்றும், சிலையை யாரும் செய்து கொடுத்தால் சென்னையிலே அதை அமைப்பதற்கான இடம் முதலிய ஒழுங்குகளைச் செய்யலாமென்று கூறினார். ஆகவே நாவலர் சிலைக்கான பணத்தைத் திரட்டி, அதைச் செய்விக்க வேண்டிய அவசர பொறுப்பு ஈழத் தமிழர்மீது சுமந்தது.

அப்பொறுப்பை ஈழத் தமிழர் ஏற்று நிறைவேற்ற முன்வந்த தமிழகத்திலே ஈழத்தின் மானத்தையும் மதிப்பையும் காக்க முற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நம்மைத் தூண்டி நமது பெருங் கடமையைச் செய்விப்பதற்காக உலகத் தமிழ் விழாக்காரர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். இன்றேல் இது ''ஆறின கஞ்சி பழங் கஞ்சி'' யாகி விட்டிருக்கும்.

இந்தப் புனித கைங்கரியத்துக்கான ஒன்றரை லட்ச ரூபாயைத் திரட்டுவது ஈழத் தமிழருக்குப் பெரிய காரியமல்ல. நினைத்தால் இரண்டொரு செல்வந்தர்களே இதைச் செய்துவிடலாம். ஆனால் நாவலர் பெருமான் ஈழத்துக்கு மட்டுமன்றி, தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்துக்கும் உரியவர். சிறப்பாக தமிழகத்தில் இருந்து பெருந் தொண்டாற்றியுள்ளார். ஆகவே அப்பெருமானுக்கு நன்றி தெரிவிக்கும் இத்திருப்பணியில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பமும் பாக்கியமும் ஈழத்துக்கு மட்டுமன்றி தமிழகம் உள்ளிட்டு, தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்துக்கும் கிடைக்க வேண்டும். ஆகவே கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள விசேஷ குழுவினர் இதற்கான ஒழுங்கு செய்வது பொருத்தமாகும்.

நாவலர் பெருமானின் சிலைகளை மூன்று இடங்களில் ஸ்தாபிப்பதின் உண்மை நோக்கமென்ன? தமிழ் மக்கள் மானத்துடன் வாழவழி செய்த அந்தத்தியாக வீரரை மறந்துவிடாமல், அவர் காட்டியநெறியில் நடந்து உய்யவேண்டுமென்பதே. இதற்காக நாவலர் ஞாபகார்த்த உதவி நிதி ஏற்படுத்தி, அதை ஒரு தர்ம ஸ்தாபனமாக்கி, அவரது நூல்களை மலிவு விலையில் பதிப்பித்து விநியோகித்து, அவரது தர்ம நிலையங்களையும் பாடசாலைகளையும் ஒழுங்குமுறையில் ஒழுங்குசெய்து புதிய உற்சாகத்தோடு பேணிக் காப்பதென்றும், மட்டக்களப்பு, மலைநாடு, திருகோணமலை, உட்பட ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ்ப்பெரியார்களை இணைத்து பேரவையை உருவாக்குவதென்றும் தீர்மானித்துள்ளது வரவேற்கத்தக்கது. இத்துடன் தமிழகத்திலுள்ள பெரியார்களையும் சேர்த்துக்கொள்வதால், தமிழகத்திலும் நாவலரின் நோக்கம் பரவ உதவியாக இருக்கும்.

நாவலர் பரம்பரையைக் காத்துவரும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களையும் இதுபற்றிய விசேஷ குழுவில் சேர்த்துள்ளதால் நாவலர் பெருமானின் நோக்கத்தை சரிவர உணர்ந்து அதனை நன்கு நிறைவேற்றவும் முடிவதாக இருக்கவேண்டும். நாவலர் ஈட்டிய பெருந்தொகை சொத்துக்கள், சிலருடைய தவறுதலால், அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு நாவலர் அவர்களின் நோக்கங்களுக்குப் பயன்படாமல் பாழாகிக் கிடக்கின்றன வென்றும், அவற்றை மீட்கவும் பொதுமக்களை இயக்கியும் ஆவனசெய்யவேண்டுமென்றும் பண்டிதமணி அவர்கள், நாவலர் நினைவுக்குழுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளார். செல்வமும் செல்வாக்கும் பெற்ற ஈழத்தமிழர் பலர், இந்தத் திருப்பணியில் ஈடுபட ஆர்வத்துடன் முன்வந்துள்ளதால், இப்பணி சீக்கிரத்தில் நன்கு நிறைவேறி, நாவலர் பெருமானின் உள்ளக்கிடக்கைப்படி தமிழர் புத்துயிர் பெற்று புதுவாழ்வு வாழ வழி பிறக்குமென்று நம்புவோம்.

இரத்மலானையில்

# இரட்டைப் பயிற்சி நிலையம்

## சர்வோதய இயக்கத் தலைவர் ஆசி

— நமது சிறப்பு நிருபர் —

நிறந்தபனது, குளிர்ந்த முகம், பொலிந்த தேஜஸ், உறுதியான கருத்து ஆகிய இலட்சணங்களுடன் இந்திய சர்வோதய இயக்கத்தின் தளபதியாகியஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் இரத்மலானையில் அகில இலங்கை காந்தி சேவாசமித்தின் அம்பர் இராட்டைப்பயிற்சி நிலையத்துக்கான கட்டடத்துக்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அடிக்கல் நாட்டி வைத்து சர்வோதய நிகேதன் என்ற ஆசிரமத்தை ஆசீர்வதித்தார். இவர் இலங்கையில் கலந்து கொண்ட பொதுநிகழ்ச்சியில் இது இரண்டாவதாகும். முதலாவது நிகழ்ச்சி மகாபோதி சங்கத்தில் சென்ற 12-ம் திகதி சர்வோதய தொண்டர்கள் மகாநாட்டில் கருத்துரை வழங்கினார்.


இந்த வைபவம் நடைபெறுவதற்கான சுமார் 2 ஏக்கர் நிலத்தை கொழும்பு இந்துக்கல்விச்சபை காந்தி நூற்றாண்டுவிழா ஞாபகமாக சர்வோதய நிகேதனை அமைக்க அகில இலங்கை காந்திசேவா சங்கத்துக்கு கொடுத்துள்ளது. சர்வோதய நிகேதனில் இப்போது இருக்கும் 6 தொண்டர்களும் பிரமச்சாரிகள் என அறிந்த ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் 'ஏன் குடும்பஸ்தர்கள் இங்கு தங்கவில்லை? எனக் கேட்டார். அமைதியான சூழ்நிலையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு ஜெயப்பிரகாஷ் நாராயணைத் தொடர்ந்து கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன அடிக்கல் நாட்டினார்.

திரு. நாராயண் அடிக்கல் நாட்டும் வைபவத்துக்கு வந்து சேர்ந்ததும் சங்கக் காரியதரிசி திரு. சோ. க. தம்பிப்பிள்ளை கதர்நூல் மாலை அணிவித்து வரவேற்றார்.

சர்வோதயத் தொண்டர் திரு கே. வேலாயுதபிள்ளை அடிக்கல்லை எடுத்து திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணிடம் கொடுக்க அதை அவர் நாட்டினார். திரு.

[6-ம் பக்கம் பார்க்க]

# இன்று 'அரியம்ஜி'யின் முதல் சிரார்த்ததினம்



இன்று அரியம்ஜியின் முதல் சிரார்த்த தினம். அகில இந்திய ஆதாரக் கல்வி நிபுணரும் சர்வோதய இயக்கத் தலைவருமான திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம் சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் அவரது சொந்தக் கிராமத்துக்கு வந்திருந்த சமயம் திடீரென இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அரியம்ஜியின் முதல் சிரார்த்ததினம் இன்று உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. திருமதி ஆஷாதேவி அரியநாயகமும் மற்றும் பலரும் கலந்துகொள்வார்கள். அரியம்ஜியின் அஸ்தி அடக்கம்செய்யப்பட்ட சமாதிக் கருகாமையில் இன்று மாலை பொதுப் பிரார்த்தனை நடைபெறும். சமாதியைச் சுற்றிப் பிரார்த்தனை மேடையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

முதலியார் செ. சின்னத்தம்பியும் திரு. அரியநாயகம், திருமதி அரியநாயகம் ஆகியோரும் சில வருடங்களின் முன் எடுத்த படம் தான் மேலேயுள்ளது.

ஆசிரியருக்கு கடிதம்

## நாவலர் சிலை

இம்மாதம் 16-ந் திகதி வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் நடைமுறைத் தமிழ் இயக்கம் நிறுவ முயற்சி செய்துவரும் நாவலர் பெருமான் உருவச் சிலைபற்றிய மாதிரிப்படம் வெளிவந்திருந்தது. இதே படம் வேறொரு பத்திரிகையிலும் சிலவாரங்களின் முன் வெளிவந்திருந்தது. ஆனால் சொற்களில் பெரியதோர் மாற்றம் புகுத்தப்பட்டுள்ளது.

''ஈழவள நாட்டின் ஆசாரசீலன்'' என்பது ''ஈழவள நாட்டின் செல்வன்'' எனவும் ''சைவநெறி காத்த சான்றோன்'' என்பது ''அறநெறி முறையின் காவலன்'' எனவும் மாற்றம் பெற்றுள்ளன.

ஏன் இந்தமாற்றம்? நாவலர் பெருமானை ஐந்தாங் குரவர்களாக சைவசமயிகள் போற்றி வருகின்றார்கள். நாவலரைச் சைவத்திலிருந்து பிரிப்பது தகாது.

க. கணபதிப்பிள்ளை
யாழ்ப்பாணம்.

# ஐயாறன் எழுதுவது

''காணக் கடல் பெருகி, காதலினால் உருகி தனித் தமிழ்ச் சொல்லினால், சிவமே, உன்னை அவர்கள் அனுதினமும் எப்படிப் பாடினார்களோ அப்படிப் பாட ஆசைகொண்ட'' அல்ல, அல்ல, அப்படியே கணக்கின்றிப் பாடிவருகிற தவத்திரு சுத்தானந்த அடிகளார் இப்போது ஈழத்துக்குப் பல வருடங்கள் கழித்து விஜயஞ்செய்திருக்கிறார்கள்.

வீடெல்லாம் கலைக்கோயில்களாக வேண்டுமென்றார் கவியோகி. யாழ்ப்பாணத்திலே 'கலைக்கோயில்'போல் விளங்கும் ஓர் அன்பரின் அகத்திலே சுவாமி தங்கி இருந்து இரு நாட்கள் பல அன்பர்களுக்குத் தவப்பயிற்சி அளித்தார்கள். அன்று மாலை சுமார் 4 மணியிருக்கும், சட்டையெல்லாம் கழற்றிவிட்டு, பொன்னார் மேனியனைப் பொலியும் அவர் யோகாசனங்களைச் செய்துகாட்டி, உடலை உறுதியாக வைத்துக்கொள்ளுவதைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்கள். 73 வயதென்று சொல்லவே முடியாது. சிறிது நேரம் இருந்துவிட்டு, மனமே இல்லாமல் வேறு அவசரவேலையாகச் சென்றுவிட்டேன்.

ஃ ஃ ஃ

அவர் ஆயிரம் நூல்கள் எழுதியிருப்பதாக ஓர் அன்பர் தெரிவித்தார். உண்மை தானா என்று அவரைக் கேட்டதற்கு, அதற்கு மேலும் எழுதியுள்ளதாயும் பிரெஞ்சு மொழியிலும் பல நூல்கள் எழுதியுள்ளதாயும் மொத்தம் எழுதியுள்ள நூல்களுக்குக் கணக்கில்லை என்றும் பல வெளிவர வேண்டியிருப்பதாயும் தெரிவித்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் பல கல்லூரிகளுக்கும் சென்று பல பிள்ளைகளுக்கும் நகைச்சுவையுடன் அறிவுரை வழங்கி, ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு பாட்டுப் பாடி கொடுத்துவிட்டு வந்தாராம் அவர். இவ்வித நூல்களையும் கவிதைகளையும் அவர் எப்படித்தான் ஆக்கித்தருகிறாரோ தெரியவில்லை.

அவரைப் பற்றி வீரக்கலை விளக்கு வ. வே. சு. ஐயர் எழுதுகையில், ''ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள், ரிஷி வாழ்வு வாழும் ஓர் அற்புதமான வரகவி, கவியோகி. அவர் வாக்கு தவத்தினால் பழுத்துக் கனிந்ததென்றே சொல்ல வேண்டும். சிறுவயது முதலே இவருக்குக் கவிதா சக்தி வளர்ந்து கொண்டு வந்திருக்கின்றது. வேலைநேரம் போக மீதி நேரமெல்லாம் தியானத்திலிருந்து உள்ளே உதிக்கும் திருவாக்குகளை அவ்வப்போது எழுதிக் குறிக்கிறார். இரவில்கூட அவர் பேனா ஆடிக்கொண்டே இருக்கின்றது. அவர் எழுதிய பாரத சக்தி மகா காவியத்தில் எல்லா மதத்தினருக்கும், நாட்டினருக்கும், ரசிகர்களுக்கும் ஒரு ஸ்வாரஸ்யம் ஏற்படும்படி அவ்வளவு விசாலமான பொருள் அடங்கியுள்ளது. இந்தக்காலம் அறியாமற்போனாலும், பிற்காலம் இந்த மகாகாவியத்தை, உலகம் அறிந்து கொண்டாடும் என்பது உறுதி...'' என்று போற்றுகின்றார்.

சிதம்பரத்துக்குப் பக்கத்திலே திருவேட்களத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளதல்லவா? சைவர்களின் ''மெக்கா'' வாகிய சிதம்பரத்தில் பல்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, வடவியட்னும் இரண்டுமே காரணம்

## வியட்னும் போர் விஸ்தரிப்புபற்றி யூ தாண்ட் கருத்து

நியூயோர்க், ஜூன், 19

வியட்னும்போரை விஸ்தரிப்பதற்காக, அமெரிக்கா, வடவியட்னும் இருதரப்பினர்மீதும் ஐ நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட் குற்றஞ்சாட்டியுள்ளார். ஐ நா. நிருபர் சங்கத்தின் நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகையில், யூ தாண்ட் இவ்வாறு குற்றம் சுமத்தினுர்.

பாரிஸ் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் கட்டத்தில் இவ்வாறு குற்றஞ்சாட்டிய ஐ. நா பொதுக்காரியதரிசி, பாரிஸ் பேச்சுவார்த்தைகள் இன்னும் நீண்டகாலத்துக்கு இந்த நெடுபிடி நிலையில் இருக்குமென்றும் குறிப்பிட்டார்.



### குண்டுவீச்சு அதிகரிப்பு

இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து, வடவியட்னும் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா அதிகரித்துள்ளதாகக் கூறிய யூதாண்ட், பல தென் வியட்னும் நகர்கள்மீது வியட்கொங்கியர் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியதன் விளைவாகப் பல சிவிலியன்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும்தெரிவித்தார்.

### இராணுவ வெற்றி கிடையாது

வியட்னும்போரில், எந்த ஒருதரப்பினருக்கும் இராணுவவெற்றி கிடைக்காது என்றதமதுகருத்தை ஐ நா. பொதுக்காரியதரிசி மீண்டும் வலியுறுத்தினுர்.

ஆனுல், இந்த உண்மையை இருதரப்பினரும் இன்னும் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை என்ருர் யூ தாண்ட்.

---

## 'பியாவ்ரா' நகர் கைப்பற்றப்பட்டது

### சமஷ்டி அறிவிப்பு

லாகோஸ், ஜூன் 19

நைஜீரியா சமஷ்டித் துருப்புகள் பிரிவினை பியாவ்ரா' நகரமானஹோகுவைக்கைப்பற்றியுள்ளதாகச் சமஷ்டி நைஜீரிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த நகரம், பியாவ்ராவின்முன்னுள் தலைநகரான எனுக்குக்கு 45 மைல் தொலைவில் உள்ளது.

ஹோகுநகரிலுள்ளவிமான நிலையமும்கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## சைப்பிரஸில் அமைதிக் காப்புப் படை

நியுயோர்க், ஜூன் 19

சைப்பிரஸிலுள்ள ஐ நா. அமைதிக்காப்புப் படையை டிசம்பர் 15-ந் திகதி வரை அங்கு நீடித்துவைத்திருக்க வேண்டுமென்ற ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டின் யோசனையை ஐ நா. பந்தோபஸ்து சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

அமைதிக்காப்புப் படையின் தற்போதைய கால வரம்பு இம்மாதம் 26-ந் திகதியுடன் முடிவடைய இருக்கிறது.

கிரேக்க, துருக்கிய, சைப்பிரஸ் பிரஜைகளுக்கிடையேயான பிரச்னைக்கு, டிசம்பருக்கிடையில் ஒரு முடிவு ஏற்படலாம் என்ற நம்பிக்கையிலேயே, அமைதிக்காப்புப் படையின் கால வரம்பை பந்தோபஸ்து சபை இவ்விதம் டிசம்பர்வரை நீடித்துள்ளதாகக்கூறப்படுகிறது.

---

கயானுமீது

## ஆக்கிரமிப்பு நோக்கம்

### வெனிசூலா மறுப்பு

கரக்காஸ், ஜூன் 19

வெனிசுலாவுக்கு கயானு மீது ஆக்கிரமிப்பு நோக்கம் இருப்பதாசக கயானுப் பிரதமர் திரு போர்ப்ஸ் போன்ஹாம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை வெனிசூலா அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் மறுத்துள்ளார்.

அவ்வித ஆக்கிரமிப்பு நோக்கம் எதுவும் வெனிசூலாவுக்குக்கிடையாது என்று குறிப்பிட்ட அவர் கயானுவுடனுன நிலத்தகராறுகளைச் சமாதான முறையில் தீர்த்துக்கொள்ளவே வெனிசூலா விரும்புவதாகவும் கூறினுர்.

---

# ரொடீஷிய தடை விதிகளை பிரபுக்கள் சபை நிராகரித்தது

## பிரிட்டிஷ் அரசியலில் பெரும் சர்ச்சை

லண்டன், ஜூன் 19

சட்டவிரோத ரொடீஷிய ஆட்சிக்கெதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்துள்ள புதிய தடைகளை பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை நிராகரித்து விட்டது. விதிகளுக்கு ஆதரவாக 184 வாக்குகளும், எதிராக 193 வாக்குகளும் கிடைத்துள்ளன.

பிரிட்டனின் ஆளுங் கட்சியரான தொழிற்கட்சிக்கு, பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் பெரும்பான்மைப் பலம் கிடையாது. அங்கு எதிர்க்கட்சியினரான கன்சர்வேடிவ்களே பெரும்பான்மையாகவுள்ளனர்.

### தார்மீக வெற்றி

தடைவிதிகள், பிரபுக்கள் சபையில் மிகச்சொற்பமான பெரும்பான்மை வாக்குகளால்மட்டுமே தோற்கடிக்கப்பட்டுள்ளதைத் தமக்கு ஒரு தார்மீக வெற்றியாக அரசாங்க தரப்பினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### சீர்திருத்தம்

அத்துடன், காமன்ஸ்சபை நிறைவேற்றும் ஒரு திட்டத்தை, பார்லிமெண்டின் இரண்டாவது சபையான பிரபுக்கள் சபை ஆதரிக்க வேண்டுமென்ற பிரிட்டிஷ் பார்லிமெண்டரி சம்பிரதாயத்துக்கெதிராகப் பிரபுக்கள்சபை நடந்துகொண்டுள்ளது, அச்சபையின் எதிர்காலம்பற்றிய சந்தேகங்களையும், சர்ச்சையையும் எழுப்பியுள்ளது.

பிரபுக்கள் சபைக்குச் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதுபற்றி, சகல கட்சி மாநாடு தீர்மானிக்கவிருந்தது. இப்போது அதற்குப் பதிலாக, தற்போதைய பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கமே, தனது சொந்தச் சீர்திருத்தங்களை கொண்டு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரபுக்கள் சபைக்குத் தீவிர சீர்திருத்தங்கள் செய்யவேண்டியது அவசியமெனத் தொழிற்கட்சி அங்கத்தர்கள் பலர் வற்புறுத்தி வருகின்றனர்.

---

## பஸ்ஸில் ரூபா 32 ஆயிரம் இழப்பு

### பிரயாணி அனுபவம்

வாரங்கல், ஜூன் 19

ஹைதராபாத் செல்ல வேண்டியபிரயாணி ஒருவர் ஹனம் கொண்டா என்ற இடத்தில் பஸ் ஏறியதாகவும் அவரது கைப்பையை பறி கொடுத்ததாகவும் பையில் ரூ. 32 ஆயிரம் இருந்ததாகவும் கூறப்படுகிறது

பிரயாணி தாமோதர ரெட்டி பொலிசிடம் இது சம்பந்தமாக ஒரு புகாரைத் தாக்கல் செய்துள்ளார். பஸ்ஸிலுள்ள சாமான்கள் தட்டில் பையை வைத்ததாகவும் டிக்கெற் வாங்குவதற்காகக் காத்திருந்ததாகவும் திரும்பி வந்து பார்த்த போது பையைக்காணவில்லை யென்றும் பிரயாணத்தை தாமதத்துச் செய்ய வேண்டி நேர்ந்தது என்றும் அவர்தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

---

## பிராந்தியப் பித்து பற்றி சவான்

புதுடில்லி, ஜூன் 19

இந்திய உள்துறை மந்திரி திரு. சவான், நாட்டில்வளர்ந்துவரும் பிராந்தியப் பித்தைக் கண்டித்துப் பேசியுள்ளார்.

பிராந்தியப் பித்தே சிவசேனை போன்ற தீவிரவகுப்புவாத இயக்கங்களுக்குக் காரணமாகுமென்று அவர் கூறினுர்.

பல்வேறு இனங்களைக் கொண்ட இந்தியா போன்ற நாட்டில் ஏராளமான பிரச்னைகள் இருக்கவே செய்யும் என்று கூறிய மந்திரி சவான் இவற்றுக்கான தீர்வு ஐக்கியத்திலேயே தங்கியுள்ளது என்ருர்.

ஒற்றுமை இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம், நாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறு திரு. சவான் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

---

## சைக்கிள் டைனமோ திருடினுராம்

நல்லூர், புதன்

மானிப்பாய், ஆலடி சராஜில் வீரகத்தி இரத்தினத்தின் சைக்கிள் டைனமோவை அங்கு இரு தினங்கள் வேலைசெய்த கந்தசாமி இராசநாயகம் என்பவர் திருடிச் சென்றதாக ஆனைக்கோட்டைப் பொலிஸில் புகார்செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் ஜெயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி சந்தேகநபரான இராசநாயகத்தைக் கைதுசெய்து பாதுகாப்பில் வைத்துள்ளது. டைனமோவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

---

ரஷ்யாவில்

# துண்டுப்பிரசுரம் விநியோகித்த மூன்று பிரிட்டிஷ் இளைஞர்

## கைது செய்யப்பட்டு விடுதலையாகினர்

மாஸ்கோ ஜூன் 19

ரஷ்யாவில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுஅங்கு கைதானமூன்று பிரிட்டிஷ் இளைஞர்கள் இப்போது தமது சொந்த நாடான பிரிட்டன் வந்து சேர்ந்துள்ளனர்.

கிறிஸ்தவ தீவிரவாதிகள் என வர்ணிக்கப்படும் இம்மூன்று பிரிட்டிஷ் இளைஞர்களும் ரஷ்யாவின் அரசியல் அறிவுக் குற்றச் சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டுமெனக் கோரும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததாகச் சொல்லப்படுகிறது.

இம் மூன்று இளைஞர்களையும் கைதுசெய்த ரஷ்ய அரசாங்கம் பின்னர் தனது மனதை மாற்றிக் கொண்டு கிடைக்கக் கூடிய முதலாவது விமானத்திலேயே நாடு திரும்புமாறு அந்த இளைஞர்களிடம் தெரிவித்தது.

மூன்று இளைஞர்களையும் வழியனுப்பி வைத்த பிரிட்டன் ஸ்தானிகர் அவர்கள் சுதந்திரமாகத் திரும்புவது அவர்களது அதிர்ஷ்டமே என்று குறிப்பிட்டார்.

---

# மே. ஜெர்மனி வெளியுறவு மந்திரி திரு. பிராண்ட்

## 'பெர்லின் சுவரை'க்கடந்து கி. பெர்லின் சென்ருர்

பொன், ஜூன் 19

கிழக்கு, மேற்கு பெர்லின் நகரங்களைப் பிரிக்கும் 'பெர்லின் சுவரை'க் கடந்து மேற்கு ஜெர்மன் வெளியுறவு மந்திரி திரு. வில்லி பிராண்ட், கிழக்கு பெர்லினுக்கு நேற்றுச் சடுதியாகச் சென்ருர். 'பெர்லின் சுவர்' 1951-ல் நிறுவப்பட்ட பின், அதைக் கடந்து கிழக்குபெர்லினுக்குள் மேற்கு ஜெர்மன் அரசியற் தலைவர் ஒருவர் செல்வது இதுவே முதற் தடவையாகும்.

கிழக்குப் பெர்லினிலுள்ள சோவியத்தூதுவரைச் சந்தித்துப் பேசவே, மேற்கு ஜெர்மன் வெளியுறவு மந்திரி திரு. பிராண்ட் அங்கு சென்ருர். சோவியத் தூதுவருடன், அவர் சுமார் 8 மணிநேரம்பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

கிழக்கு — மேற்கு பெர்லின் போக்குவரத்துச் சம்பந்தமாகக் கிழக்கு பெர்லின் அண்மையில் புதிதாக விதித்துள்ள தடைகள் பற்றியே திரு. பிராண்ட், சோவியத் தூதுவருடன் பேசியதாகக் கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தைகள் பற்றிய மற்ற விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

---

# பீகிங் வரவேற்பு வைபவத்திலிருந்து கி. ஐரோப்பிய பிரதிநிதிகள் வெளிநடப்பு

## புதிய ரஷ்ய - அமெரிக்க அணு ஏகாதிபத்தியம் பற்றி சீனப்பிரதமர்

பீக்கிங், ஜூன் 19

பீக்கிங்கில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்ச்சியொன்றிலிருந்து சோவியத் ரஷ்யா, மற்றும்கிழக்கு ஐரோப்பிய நாட்டுத்தூதுவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

தான்ஸானியா ஜனுதிபதி திரு. நைரேரேவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது ரஷ்யாவுக்கு எதிராகச் சீனப்பிரதமர் திரு. [illegible] வார்த்தைகளே இந்த வெளிநடப்புக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.



அணுஆயுதபரவல் தடை நகல் ஒப்பந்தம் பற்றிச் சீனப் பிரதமர் குறிப்பிடுகையில் புதிய சோவியத்—அமெரிக்க அணு ஏகாதிபத்தியத்தையே அது குறிப்பதாக அவர் குற்றஞ்சாட்டினுர்.

சீனப்பிரதமர் இவ்விதம் குறிப்பிட்டதும் கிழக்கு ஜெர்மனி போலந்து ஹங்கேரி, பல்கேரியா, செக்கோஸ்லாவாக்கியா, மொங்கோலியா, ரஷ்யா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள் வரவேற்பு நிகழ்ச்சியிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குலத்தொழிலை கற்றலும் வாழ்க்கையில் முன்னேறலாம்'

அளவெட்டி, புதன்

''எதிர்காலத்தில் இளைஞர்கள் எவ்வளவுதான் படித்தாலும் உத்தியோகம் கிடைக்குமா என்பது பெருங்கேள்வியாக எழுந்துள்ளது. ஆகவே இளைஞர்கள் பாரம்பரியமான தம் குலத்தொழிலைச்செய்து தம் வாழ்க்கையை நல்ல முறையில் அமைக்கலாம்.''

இவ்வாறு முன்னாள் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. எஸ், அம்பிகைபாகன் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் நேற்று நடைபெற்ற விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

கல்லூரி விளையாட்டரங்கில் கல்லூரி அதிபர் திரு. வைப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அம்பிகைபாகன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—என்னை இங்கு அழைத்தது தனிப்பட்ட முறையில் அல்ல, எனது பதவிக்கு மதிப்பளிக்கவே இங்கு அழைக்கப்பட்டுள்ளேன்:

இக்கல்லூரியும் எனது கல்லூரியும் பரஸ்பரமாக பழகி வருகின்றன இதற்கு ஒரு காரணம் உண்டு, இரண்டு பாடசாலைகளிலும் இறைவனின் பெயர் ஆகவே இருக்கின்றன.

இக்கல்லூரி அமைந்திருக்கும் இடம் நல்லஇடம்: இக்கல்லூரி காங்கேசன்துறையில் அமைந்தது சாலச் சிறந்தது.

தற்போது நாட்டில் நிலவி வரும் பொருளாதாரப்பிரச்னையைத் தீர்க்க கைத்தொழில் வசதி முக்கியம் தேவை. கைத்தொழிலை சகல கல்லூரிகளிலும் படிப்பித்து நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க கல்லூரிஅதிபர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

சேது சமுத்திரத்தை இந்திய அரசாங்கம் ஆழமாக்க திட்டமிட்டுள்ளபடியால் அத்திட்டம் நிறைவேறினால் காங்கேசன்துறை உலகத்திலும் இலங்கையில் பெரிய மிகச்சிறந்த துறைமுகமாகத் திகழும்.

திருமதி அம்பிகைபாகன் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கினர்.

## திருட்டு வழக்கில் ஒருவர் விடுதலை; இருவர் குற்றவாளிகள்

குரும்பசிட்டி, புதன்

காங்கேசன்துறையைச் சேர்ந்த கந்தையா செல்லையா என்பவரது கடையில் கூரை பிரித்து உட்புகுந்து சுமார் 850 ரூபா பெறுமதியான பொருட்களை கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 30-ம் திகதி களவாடியதாக யாழ்ப்பாணம் வாசிகளான ரத்தின பாலசிங்கம், விஜயராஜா, வதிரி வாசி ராஜகுலசிங்கம் ஆகிய மூன்று வாலிபர்கள் மீது காங்கேசன்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு எம் சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் போதியசாட்சியம் இல்லாத காரணத்தால் மூன்றும் எதிரியை விடுதலை செய்வதாகக்கூறி முதலாம், இரண்டாம் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு, கைவிரல் அடையாளம் பதிவுசெய்ய உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கும்வரை இருவரையும் இம்மாதம் 30-ம் திகதிவரை விளக்கமறியலில்வைக்க உத்தரவிட்டார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியா. 20-6-68**

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**364 மீற்றர் அல் 61 மீற்றர்**

மாலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 தேவாரப் பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை.

**364 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 கல்விச்சேவை 5-15 பிறந்தநின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

**364 மீற்றர் அல் 61 மீற்றர்**

இரவு 6-15 பாட்டு- செல்வம் நாராயணசாமி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-45 பாட்டு- கே. ஆர். நடராசா.

# "இரத்தக் காயத்துடன் இறந்துகிடந்தார்"

## கட்டுவன் கொலைவழக்கு: மனைவி சாட்சியம்

குரும்பசிட்டி, புதன்

''வாமதேவன் வந்து அத்தானை வெட்டிப்போட்டார்கள் என என்னிடம் தெரிவித்தார். கிணற்றடிக்குப் போனபோது கணவர் இரத்தக் காயங்களுடன் இறந்து கிடக்கக் கண்டேன்''

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் கட்டுவன் கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இறந்தவரின் மனைவி முத்தம்மா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்,

எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போது, சம்பவநாள் எதிரியை எந்த இடத்திலும் தாம் காணவில்லை என்றும், எதிரியின் கூக்குரல் சத்தம் தமக்குக்கேட்டகில்லை என்றும், தமது கணவரை அவரது தம்பி சின்னையா கட்டிப்பிடிக்க எதிரி கத்தியால் வெட்டியதாக வாமதேவன் தெரிவித்ததாகவும் கூறினார்.

எதிரியைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் மீண்டும் இம்மாதம் 30-ம் திகதிக்கு மேல்விசாரணையை ஒத்திவைத்தார்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 27-ம் திகதி கட்டுவனைச்சேர்ந்த முருகேசு செல்லத்துரை என்பவரைக் கொலைசெய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த வீரசிங்கம் தம்பிராசா என்பவர் மேல் காங்கேசன்துறை பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்,

## கணவனுக்கு 4 மாத கடுழியம்

### ஜீவனாம்சம் கட்டத்தவறினார்

குரும்பசிட்டி, புதன்

தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் மாதாந்தம் ரூபா 60 வீதம் எட்டு மாதங்கள் மொத்தம் 480 ரூபா பராமரிப்புப் பணம் செலுத்தத் தவறிய சண்டிலிப்பாய் வாசியான கந்தையா என்பவருக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் நான்கு மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார். நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய பிரஸ்தாப நபர் மீது பிறப்பிக்கப்பட்டிருந்த வாறண்டை யடுத்து சங்கானைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிபதி முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

பிரதிவாதியான கந்தையா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பிரதிவாதி தொழில் இல்லாதவர் என்றும், நோய் வாய்ப்பட்டிருந்தமையால் பணம் செலுத்த சுணக்கம் ஏற்பட்டதாகவும் நீதிபதியிடம் கூறினார். நீதிபதி வாதியான நாகம்மாவிடம் கணவன் பணம் கட்டத் தவணை வழங்க விருப்பமா எனக் கேட்டதற்கு மனைவி மறுப்புத் தெரிவித்து கணவனைச் சிறைக்கு அனுப்பக் கோரினார்.

## நடவடிக்கை எடுக்குக

அளவெட்டி, புதன்

வடபகுதி உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியை, யாழ்ப்பாணம் வர்த்தகர் பாவனையாளர் சங்கத்துதுக்குழு சந்தித்து மொத்த வியாபாரிகள் கைப்பிடிக்கும் முறைகளை குறித்து [illegible] வடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தியுள்ளது.

# தீவுப்பகுதி படகுசேவை மீண்டும் பழைய பல்லவி

அனலைதீவு, புதன்

தீவுப்பகுதி படகு சேவை மீண்டும் பழைய பல்லவி பாட ஆரம்பித்துள்ளது. கடந்த சில மாதங்களாக பிரயாணிகளுக்கு வசதியான முறையில் இயங்கி வந்த இச்சேவை இப்பொழுது நல்ல நிலையில் இயங்கவில்லையாம்

ஊர்காவற்றுறையிலிருந்து தபால்களுடன் புறப்பட்ட காலை 8-15 படகு தற்பொழுது எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு முதலிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடுவதில்லை, கால வரையின்றி முந்தியும், பிந்தியும் புறப்படுகிறதாம், இதனால் தபால்சேவை உரிய நேரத்தில் நடைபெறவில்லை எனப் புகார்கள் தெரிவிக்கின்றன.

அனலைதீவிலிருந்து ஏற்கவவே நடைபெற்ற காலை 7-30மணி, 8-30மணி, 2-15 மணி சேவை மட்டுமே நடைபெறுகிறது. அனலைதீவிலிருந்து மாலை 12-30 மணிக்கு நடைபெற்ற சேவை ஸ்தம்பித்துள்ளது, ஊர்காவற்றுறையிலிருந்து காலையில் ஒரு படகும் மாலை 3,4 மணிக்கு 2படகுகளிமாத்திரம் சேவையில் ஈடுபட்டுள்ளன.

# "வெடிச்சத்தம் கேட்டதும் எதிரிதுவக்குடன் நின்றார்"

## அல்லாரை கொலைவழக்கு விசாரணை

சாவகச்சேரி, புதன்

''இறந்த ராமு கார்த்திகேசுவும் நானும், விருத்தம்பியும் தோட்டத்தில் தண்ணீர் இறைத்துக் கொண்டு நின்றபோது மேற்குத்திசையில் வெடிச்சத்தம் கேட்டது. நான் பார்த்தபோது இறந்த கார்த்திகேசு விழுந்து கிடந்தார். காசிநாதர் துவக்குடன் நின்றார். தப்பிவிட்டான்என்று கூறிய எதிரி காசிநாதர் துவக்கை மூன்றும் எதிரி ராசுவிடம் கொடுத்துவிட்டு கத்தியுடன் ஓடிவந்தார். இறந்தவர் என்னை நோக்கி ஓடிவந்து என் அருகே விழுந்துவிட்டார்.''

அல்லாரைக் கொலை வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு வே. விக்னராசா முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த காசிகேசு கார்த்திகேசு என்பவர்மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் மே மாதம் 8-ம் திகதி அல்லாரை வாசியான ராமு கார்த்திகேசு அல்லது செல்லையா அல்லது மாத்தயா என்பவரை சுட்டுக் கொலை செய்ததாக அதே ஊர்வாசிகளான முத்து தில்லையம்பலம், நமசிவாயம் காசிநாதர் கந்தையா அல்லது தம்பு பஞ்சாட்சரம், வைரமுத்து நாகநாதி, வல்லி சிவனாத்தம்பி, முத்து கனகசபை ஆகிய ஆறுபேர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரிகள் சார்பில் புரக்டர்களான எஸ். கே. திரவியநாயகம், எஸ். பி. மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் பாரிஸ்டர் எம் சிவானந்தன் ஆஜரானார் வழக்காளிதரப்பில் சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேர்னாண்டோவினதும் புரக்டர் வி. செல்லத்தம்பியினதும் அனுசரணையுடன் அட்வகேட் திரு. ஜெயக்கொடி வழக்கை நடாத்தினார்.

சாட்சி கார்த்திகேசு தொடர்ந்து கூறியதாவது:-

நான் கத்தியை எடுத்தேன். விருத்தம்பி தடியை எடுத்தார். காசிநாதர் ஒழுங்கைக்குத் திரும்பிச்சென்று ''வாருங்கள் பார்ப்போம்'' என்று கூறினார். இறந்த கார்த்திகேசு தண்ணீர் கேட்டார். நான் கொடுத்த ஓர் இரு நிமிடங்களில் அவர் இறந்துவிட்டார். எதிரிகளும் சென்றுவிட்டனர். எதிரிகளுக்கும் இறந்தவருக்கும் என்ன கோபமென எனக்குத் தெரியாது.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கண்டக்டரின் நேர்மை

சுழிபுரம், புதன்

யாழ். மாநகர சபை நூல்நிலையத்தில் கடமையாற்றும் தொல்புரத்தைச் சேர்ந்த திரு. ச. கந்தையா நேற்று முன்தினம் இ. போ. ச. பஸ்ஸில் சுழிபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்தார். இவ்வண்டியில் கண்டக்டராகக் கடமையாற்றிய திரு. ஆ. தெட்சணாமூர்த்தி என்பவரிடம் ஐந்து ரூபா கொடுத்து மிகுதிப் பணம் பெற்றுக்கொள்ளாமல் சென்றுவிட்டார். கண்டக்டர், மிகுதிப் பணம் ரூபா 4-65 சதத்தை அன்று மாலை உரியவரைத் தேடிப் பிடித்து சேர்ப்பித்தார்.

## வயோதிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

நச்சுத்திராவகம் அருந்திய தால் 85 வயது வயோதிபர் மரணமானார் இச்சம்பவம் கொக்குவில் கிழக்கில் நடைபெற்றுள்ளது. [வ. நி.]


இறைவன் திருமேனியில்

சந்தனக் காப்பிட்டு

அலங்கரிக்க மிகவும் உகந்த

பச்சை சந்தனம்

உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.

என்றும் எங்களிடம் கிடைக்கும்

சுந்தரம் பிரதர்ஸ்

கோவில் அபிஷேகப் பொருட்கள்

மருந்துச்சரக்கு விற்பனையாளர்

73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி

பிள்ளையார் கோவில்

பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்

எழுதுவது:

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விநாயகரை வேண்டுகிறேன்.



இடமாற்றம்

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

228 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது ஸ்தாபனத்தை ஸ்ரான்லி ரோட்டிலுள்ள 25-ம் இலக்க கட்டிடத்திற்கு இந்த மாத இறுதியில் மாற்ற இருக்கிறோமென்பதை எமது வாடிக்கைக்காரருக்கும் ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அதிபர்

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

228 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

# யாழ். சாம்பியன் கோஷ்டி மன்னாரை வென்றது

யாழ்ப்பாணம், வியா. விளையாட்டமைச்சினால் நடாத்தப்பட்டு வரும் அட இலங்கைச் சனசமூக நிலையங்களின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், யாழ்ப்பாணச் சாம்பியன் கோஷ்டியான நாவாந்துறை சென் மேரிஸ் கழகம் மன்னார் சாம்பியன் கோஷ்டியான சென் ஜோசப் கோஷ்டியை 3—2 கோல்களால் வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணம் ஸ்டேடியம் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாகவே காணப்பட்டது.

போட்டி ஆரம்பமான சில நிமிட நேரத்தில் சென் மேரிஸ் முன்னணி வீரரான திரு. டா. அன்ரனி தனது கழகத்துக்காக ஒரு கோலை அடித்தார். இதனால் இடைவேளையின் போது கோலின் எண்ணிக்கை 1—0 ஆகவே இருந்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமானதும் திரு. அன்ரனி மேலும் ஒரு கோலை அடித்து கோல்களின் எண்ணிக்கையை 2ஆக கூட்டினார். அடுத்து மன்னார் சென் ஜோசப் பெனடிக்ட் புஸ்பம் தனது கழகத்துக்காக ஒரு கோலை அடிக்க சென் மேரிஸ் முன்னணி வீரரான அன்ரனி தனது கழகத்துக்காக 3வது கோலையும் அடித்தார். போட்டி முடிவடைய சிறிது நிமிடமிருக்கையில் சென் ஜோசப் பெனடிக்ட் தனது கழகத்துக்காக 2வது கோலை எதிர்பாராதவிதமாக அடித்தார்.

இப்போட்டிக்கு இன்ஸ்பெக்டர் புஸல்ல மத்தியஸ்தம் வகித்தார். [கா. நி]


REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Doris Day & Rod Taylor
in
DO NOT DISTURB


MANOHARA
JAFFNA
Daily 6-30, 10-00 P. M
Sudu Nangi
(சுது நங்கி)
(Sinhala)

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி-சாவித்திரி
வீரப்பா
நடித்த
பத்தினித்தெய்வம்

வின்சர்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி

3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர்.விஜயா
நடிக்கும்
முகூர்த்த நாள்

இன்ஸ்லி | பிளாசா | ஷைலன்
வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ராஜ் [நீர்கொழும்பு]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [கட்டன்] | அயன் [மன்னார்]
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு


### அமிர்தலிங்கம் உரைநிகழ்த்துவார்

யாழ்ப்பாணம், வியாழன் சுன்னாகம் நூல்நிலைய ஆராய்வுக்குழு கருத்தரங்கில் வட்டுக்கோட்டை எம். பி.யும் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் இம்மாதம் 23-ந் திகதி மாலை 6 மணிக்கு மாவட்ட சபைகள் பற்றி உரைநிகழ்த்துவார்.

---

## தடயப் பொருட்கள் பரிசோதனைக்கு

குரும்பசிட்டி, புதன் சண்டிலிப்பாய் துப்பாக்கிச் சூட்டு கொலை வழக்கின் தடயப் பொருட்கள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. டி. மென்டிஸின் விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க கை விரல் அடையாள நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பிவைக்க மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

சாட்சிகளுக்கு சமன் அனுப்ப உத்தரவிட்டு எதிரிகளை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு கூறி மேல் விசாரணையை நீதிபதி இம்மாதம் 25-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

இவ் வருடம் மே மாதம் திகதி சண்டிலிப்பாயில் சங்கானை வாசியான கே. தம்பிஐயா என்பவரை கொலை செய்ததாகவும் குணரத்தினம் என்பவரை கொலை செய்ய எத்தனித்ததாகவும் தவராஜா, தங்கராஜா, தேவராஜா ஆகிய மூவர் மீது சங்கானைப்பொலிசார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

---

### விபுலாநந்தருக்கு முதலிடம்

சுழிபுரம், புதன் காரைநகர் யாழ்ரன் கல்லூரி இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விபுலாநந்த இல்லம் 150 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், இராமநாதன் இல்லம் 100 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்தையும், நாவலர் இல்லம் 67 புள்ளிகளைப்பெற்று மூன்றாவது இடத்தையும், நடராசா இல்லம் 60 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தையும் பெற்றது. விபுலாநந்த இல்லம் தொடர்ந்து ஐந்து வருடங்களுக்குமேல் சாம்பியன் கேடயத்தை பெற்று வந்துள்ளது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு உதவி அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி சமாரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

---

### சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படும்

குரும்பசிட்டி, புதன் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் வசாவிளான் குட்டியப்புலம் கொலை வழக்கின் எதிரிகளை விசாரணை முடிவில் உயர் நீதிமன்ற விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டு சுப்ரீம் கோர்ட்டிற்கு வழக்கை பாரப்படுத்தினார். எதிரிகள் ஆறு பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வசாவிளான் குட்டியப்புலம் வாசியான கணபதி சடையன் என்பவரை இவ்வருடம் ஜனவரி மாதம் 26-ம் திகதி கொலைசெய்ததாக கே. இன்னாத்துரை, பி. துரையன், கே. பொன்னன், ச. பொன்னன், வள்ளி, சரவணை ஆகிய ஆறு பேர் மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்கு காங்கேசன் துறைப் பொலிஸாரால் தொடரப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் [illegible] வழக்கினார். ஆர். ஜெ [illegible] யுடன் ஆஜராகியிருந்தார்.

### சுத்தானந்தரின் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியா. இன்று கவியோகி சுத்தானந்த பாரதியார் 10-00 மணிக்கு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்திலும், பி. ப. 6-00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்திலும், இரவு திருக்கோணமலையிலும் சொற்பொழிவாற்றுவார். (ந. நி.)

---

## விளையாட்டுப் போட்டி

பண்டத்தரிப்பு, புதன் இளவாலை புனித என்றியரசர் கல்லூரி விளையாட்டுப் போட்டி இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவிருக்கிறது

---

## ஆலயப் பிரவேசம்

### அரசாங்க அதிபர் இறுதி முயற்சி

யாழ்ப்பாணம், வியாழன் வடபகுதி ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஆலய அர்ச்சகர்களுடன் கூடி ஆராயும் இறுதிமுயற்சியொன்றை இம்மாதத்துடன் இடமாற்றலாகிச் செல்லும் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா கடைசியாக மேற்கொண்டுள்ளார். இம்மாநாடு இம்மாதம் 23-ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

ஆனால் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு ஆலயப்பிரவேசத்துக்கு ஏற்கனவே மகாநாடொன்றில் விதிக்கப்பட்ட காலக்கெடுவை நீடிக்க பொலிஸ் சுப்பிரின்டென்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் மறுத்துள்ளார். இதற்கு விதிக்கப்பட்டுள்ள காலக்கெடுவும் இம்மாதம் 30-ம் திகதியுடன் முடிவடைகின்றது.

ஆலயப் பிரவேசத்தைச் சுமுகமான முறையில் நடாத்த அரசாங்க அதிபர் இம்மாதம் 23-ம் திகதி கூட்டும் மகாநாட்டுக்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் அர்ச்சகர்களும் பரிபாலகர்களும் மட்டும் அழைக்கப்பட்டுள்ளனர். (கா. நி.)

---

## "3 தினங்களுக்கு பரீட்சை நடத்தவேண்டும்"

உடுப்பிட்டி, புதன் ஜீ. சி. ஈ. [சாதாரணம்] பரீட்சைக்குத் தட்டெழுத்துப் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் தொகை அதிகரித்து வருகின்றபோதிலும் எல்லா மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றமுடியாது கஷ்டமுற வேண்டியுள்ளது. போதியளவு தட்டெழுத்துப் பொறிகள் இன்மையே இதற்குக் காரணம். இலங்கையின் தேவைக்கேற்றளவு தட்டெழுத்துப் பொறிகள் இல்லாமலுள்ளது. இக்குறைபாட்டைப் போக்கவேண்டுமாகில் தட்டெழுத்துப்பரீட்சையைத் தொடர்ந்து 3 நாட்களுக்கு வைக்கவேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜரொன்றை வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கச் செயலாளர் கல்விமந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

---

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், புதன் சுழிபுரம் மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: க. கந்தசுவாமி ஜே. பி. உபதலைவர்: க. வேலாயுதர், காரியதரிசி: இ. கப்புத்துரை.

நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.


விளம்பரம்

AN INTENSIVE COURSE IN ENGLISH

பல்கலைக்கழகப் புகுமுக G.C.E. [சாதாரண] வகுப்பு மாணவர்களுக்குத் தீவிர ஆங்கிலப்பயிற்சி.

தொடக்கம்: 15-6-68
காலை 9 மணி

நடத்துபவர்:
கா. வைரமுத்து, B. A.,
8, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
826

இலங்கைச் சாகித்திய மண்டலம்
இக்காலத் தமிழ்க் கவிதைக் குழு
நடத்தும்
கவிதைவிமரிசனப் போட்டி
இறுதித் திகதி
31 - 7 - 68
விபரங்களுக்கு எழுதவும்:
பொதுச் செயலாளர்,
இலங்கைச் சாகித்திய மண்டலம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு—7
839


## பாக்கிப் பணம் பெறவில்லை

அளவெட்டி, புதன் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளுக்குச் சிமெந்துக் கூட்டுத்தாபனம் தகுந்த சலுகையளிக்காததையிட்டுத் தங்கள் பாக்கிப் பணத்தை எடுக்க மறுத்துள்ளார்கள்.

இத்தொழிற்சாலையின் 4 சங்கங்கள் ஒன்று சேர்ந்து கேட்டுக்கொண்ட கோரிக்கைகளுக்குத் தகுந்த பலன் கிடைக்காததைத் தொடர்ந்து மீண்டும் சங்கப் பிரதிநிதிகளுக்கும் சிமெந்துக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவு தெரியும் வரை தொழிலாளர்கள் தமது பாக்கிப் பணத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்துள்ளார்கள்.

---

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியாழன் ஆசிரியர் சகோதரத்துவ சங்க 34வது வருடப் பொதுக்கூட்டம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: கே. நல்லதம்பி, உப தலைவர்: எஸ். மகேஸ்வர ஐயர், செயலாளர்: இ. குணபாலசிங்கம், உப செயலாளர்: ஏ. முருகேசு, பொருளாளர்: கே. சுப்பையா. 10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. [ந. நி.]

---

## பாராட்டு

உடுப்பிட்டி, புதன் அகில இலங்கை வள்ளுவர் நினைவுப்போட்டியில் முதற்பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்ற கரவெட்டியைச் சேர்ந்த கவிஞர் மன்னவன் மு. கந்தப்புவுக்கு வடமராட்சி இலக்கிய வட்டம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சித்திர ஆசிரியர்கள் திறமையை காட்டவேண்டும்'

## சித்திரக்கண்காட்சியில் வித்தியாதிபதி



யாழ்ப்பாணம், புதன்

"யாழ்ப்பாணம் ஒரு வரண்ட பிரதேசம் அல்ல. இதனை நிரூபிக்க இங்கு நிலவுகின்ற கலை வளமே போதும். யாழ்ப்பாணத்தில் கலை வளர்ந்து வருவதைப் பார்த்து மெச்சக் கூடியதாக இருக்கின்றது. திரு. ஏ. இராசையா ஆசிரியர் தனது சித்திரக் கலையை கண்காட்சிக்கு வைக்க முன்வந்தது போற்றத்தக்கது. சித்திர ஆசிரியர்கள் தங்களின் திறமையைக் காட்டினால் மாணவர்கள் சித்திரக் கலையில் முன்னேறலாம்.

இவ்வாறு கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சித்திரக் கழக கண்காட்சி விழாவை திறந்துவைத்துப் பேசுகையில் வடமாநிலவித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் கூறினார்.

கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். இராசதுரை தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. தணிகாசலம் மேலும் பேசுகையில் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் சித்திரக் கூடங்கள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் இருக்கும் சித்திரக்கூடம் இவ்வளவு காலமும் இயங்கிவராமல் இருந்ததற்குக் காரணம் வரைதல் ஆசிரியர்களின் உற்சாகக் குறைவே. வரைதல்மூலமாக சிறந்த கல்வி முறையைக் கற்பிக்கமுடியும். 17-வயது நிரம்பிய சேனுக்கா செனநாயக்கா வரைதலில் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அவரின் திறமையே. யாழ்ப்பாணத்திலும் இவர்போன்றவர்கள் மறைந்துகிடக்கின்றார்கள் என்றார்.

அதிபர் எஸ். இராசதுரையும் உரையாற்றினார். [ந நி]

---

*பிரதிநிதிகள் சபை*

# ஜூலை 7-ல் மீண்டும் கூடும்

கொழும்பு, புதன்

ஆட்சிமன்றத்தின் தற்போதைய கூட்டத்தொடர் இன்றுடன் முற்றுப்பெறும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் இன்று கூடிய மக்கள் பிரதிநிதிகள்சபை அடுத்த மாதம் 7-ந் திகதி கூடுவதற்காக ஒத்திவைக்கப்பட்டது.

ஆட்சிமன்றக் கூட்டத்தொடர் முடிவடையுமா என்று திரு பீட்டர்கெனமன் கேட்டபோது அது அங்கத்தவர்களின் ஒத்துழைப்பைப் பொறுத்து இருக்கிறது என்று நிதி மந்திரி பதிலளித்தார்.

இலங்கை காணி ஈடுமீட்பு மசோதாவும் நிதி திருத்த மசோதாவும் இன்று சபையில் நிறைவேறின.

---

# 'ஆலயத்தில் குழப்பம்செய்தால் கடும் தண்டனை'

### — நீதிபதி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரர் ஆலயத்தில் அவதூறாகப் பேசி பக்தர்களுக்கு இடையூறு விளைவித்ததாக எம். ஆறுமுகம் என்பவர்மீது யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரியை எச்சரிக்கை செய்து விடுதலை செய்கையில் ஆலயங்களில் குழப்பங்கள் விளைவித்தால் கடும் தண்டனை இனி கிடைக்கும் என மாஜிஸ்டிரேட் தெரிவித்தார்.

---

# புதிய சந்தை

வவனியா, புதன்

வவனியாவில் கட்டப்பட்டுள்ள கிழமைச் சந்தையை இம்மாதம் 24-ம் திகதி வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் திறந்துவைப்பார். (அ. நி)

---

# இராட்டை......

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

நாராயணனுக்கும் திரு. பிலிப் குணவர்த்தனாவுக்கும் நூற்றாண்டுவிழா செயலாளருள் ஒருவராகிய திரு. கே. சி. தங்கராசா சங்கவேலைகள்பற்றியும் நூற்றாண்டு விழாதிட்டம்பற்றியும்விளக்கிக்கூறினார்.

திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண் பேசுகையில் 'சர்வோதய நிகேதன்' எதிர்காலத்தில் மிகவும் சிறப்படைந்து பணியாற்றவேண்டுமென ஆசைப்படுவதாகக்கூறினார்.

அகிலபாரத சர்வசேவா சங்க பொதுச் செயலாளர் திரு. ராதாகிருஷ்ணன் சர்வோதய நிகேதன் விமான நிலையத்துக்குப் பக்கத்தில் மிக அமைதியான சூழ்நிலையில் அமைந்திருப்பது மிகவும் வரவேற்கக்கூடியதென்றார்.

திரு. பிலிப் குணவர்த்தனா, தாம் ஒருநல்லகைங்கரியத்தில் பங்குபற்றியது மனதுக்கு மகிழ்ச்சி தருவதாகக் கூறினார்.

[illegible] பிரகாஷ் நாராயணனை [illegible] வைத்தார்கள்.

---

# விற்பனவு இலாகா, கூ. மொ. வி. கொள்ளை லாபமடிக்கின்றனவாம்

## அரசாங்க ஆளும் கட்சிக்குழு கூட்டத்தில் புகார்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள விற்பனவு இலாகாவும், கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகாவும் அத்தியாவசியமான பொருள்களில் கொள்ளை லாபமடிப்பதாகப் புகார் தெரிவித்தனர், அரசாங்க ஆளும் கட்சிக் குழுவைச் சேர்ந்த சில எம். பீ.க்கள், அரசாங்க ஆளும் கட்சிக் குழுக்கூட்டம் நடைபெற்றபோது இதுசம்பந்தமாகப் பலத்த புகார் தெரிவித்தனர்.

மிளகாய் கட்டுப்பாட்டு விலை 1 ரூபாய் 60 சதமாக இருக்க விற்பனவு இலாகாவில் 4 ரூபாய் 50 சதமாகவும், கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகாவில் 2 ரூபாய் 07 சதமாகவும் விற்கப்படுவதாகச் சில எம். பி.க்கள் தெரிவித்தனர்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குக்கீழ் இயங்கும் இந்த ஸ்தாபனங்கள் இப்படியாகக் கொள்ளை லாபமடிப்பது மக்கள் வயிற்றிலடிப்பது போலாகுமென்றும், இதனைத் தடுக்கக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர்கள் யோசனை தெரிவித்தனர்.

---

# சூதாடினர்களாம்

## 24 பேர் கைது

யாழ்ப்பாணம், புதன்

சட்டவிரோதமாக சூதாடியதாக 24 பேரை நேற்று பொலிசார் கைது செய்தனர். பெரியகடையில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. ஒரு விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் இவர்களை சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜெய்சிங்கா கைது செய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்தார். விளையாட்டுக் கழகத்துக்குச் சொந்தமான தளபாடங்களும் மாஜிஸ்டிரேட் முன் சமர்ப்பிக்கப்பட்டன.

சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி ஜூலை மாதம் 18-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார். [ந. நி.]

---

# கொழும்பில் மீனுக்குத் தட்டுப்பாடு

கொம்பனித்தெரு, புதன்

கொழும்பு நகரில் தற்பொழுது மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மீனின் விலை அதிகரித்துள்ளது. வெளிஇடங்களில் இருந்து கொழும்பு நகருக்குவரும் மீன்கள் இப்பொழுது அதிகமாக வராததே இதற்குக் காரணமாம். கடலில் கடும்காற்று தொடர்ந்து வீசுவதினால் மீனவர்கள் கடலுக்குப்போக அஞ்சுகிறார்கள்.

---

# சுகாதார வாரவிழா

வவனியா, புதன்

மக்கள் சுகாதார வாரம் வவனியா நகரசபை மைதானத்தில் இம்மாதம் 24ம் தேதி கொண்டாடப்படும். இதில் சௌக்கிய மன்னன் சௌக்கியராணி சௌக்கியமான பிள்ளை சௌக்கியமானதாய் மாதிரிக் குடும்பம் ஆகியவற்றிற்குபோட்டிநடைபெறும்.

வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. சீ. பெரேரா வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் வவனியா நகரசபை முதல்வர் திரு.ம பொன்னையா வவனியா சுகாதார அத்தியட்சகர் டாக்டர் வி. சங்கரப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்

---

# விடத்தல்தீவு குடிநீர் திட்டம்

## மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

விடத்தல் தீவில் 1964-ம் ஆண்டு சூறாவளியினால் பாதிக்கப்பட்டு இயங்காமல் இருந்தது. விடத்தல்தீவு குடிநீர் வழங்கும் திட்டம். இதனால் விடத்தல்தீவில் உள்ள பெண்களும், குழந்தைகளும் அதிகாலையிலும், மாலையிலும் தலையில் குடங்களுடன் தினசரி 3 மைல் நடந்து செல்லவேண்டிய பரிதாப நிலைக்குள்ளாகியிருந்தனர்.

அண்மையில் இத்திட்டத்தை வடபிரதேச பொறியியலாளர் முயற்சியால் 20 நாட்களில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. வடமாநில பொறியியலாளர் திரு எஸ். புவனேஸ்வரன், மன்னார் மாவட்ட நீர் வழங்கல் பொறுப்பதிகாரி திரு. பி. சித்திரநாதன் ஆகியோரின் பெரு முயற்சியால் இவ்வேலை பூர்த்தியாயிற்று.

இத்திட்டத்தைப் பூர்த்தியாக்குவதற்கு வேண்டிய மானியத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரத்தினமும், மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோனும் முயற்சி எடுத்திருந்தனர்.

இத்திட்டத்தை உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் திறந்துவைத்தார். [ந நி.]

---

# ஐயாறன்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கலைக்கழகம் ஆரம்பிக்கவேண்டுமென்று முதல்முதலாக முயற்சித்தவர் நாவலர்பெருமான் தானும். அவருடைய மனத் திட்டம் பிறகு வினைத் திட்டமாகி, அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக விளங்குவதாகவும், யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் இராமநாதன் பெயரில் ஏற்படவேண்டுமென்றும் அதில் நாவலர் சமயக் கல்லூரி அமையவேண்டுமென்றும், சமயம், தொழில், கலை இம்மும்மைக் கல்வியும் மனிதனை நிறைவாக்கக்கூடியதென்றும், மூன்றுக்கும் இந்தப் பல்கலைக்கழகத்தில் இடமளிக்கவேண்டும் என்றும் கருதுகின்றார்.

இதுவரை பல வகைகளில் ஈழமே தமிழகத்துக்கு வழிகாட்டி உதவி வந்துள்ளதாகவும், இனியும் அப்படியே செய்யவேண்டும் என்றும் தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பலப்படுத்தவேண்டுமென்றும் சுவாமி அவர்கள் சொன்னார்கள்

கவியோகி அவர்கள் இனி எப்போது இங்கு வரப்போகிறாரோ? அப்பெரியாரைக் கண்டு, அவரது உபதேசங்களை நேரில் கேட்டறிய ஈழமக்களுக்கு இது நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

ஃ ஃ ஃ

உலகெலாம் ஒரு நாடென
வாழ்க!
உனதெனதெனும் சண்
டைகள் ஓய்க!
பல மதங் களின் பந்தனே
தீர்க?
பரமன் ஒன்றெனும்
பண்பு வளர்க!
கலக மின்றிக் கட்டுக
ளின்றிக்
கருணை யான கடவுளே
அன்பால்
விலகறக் கலந்தின்பம்
விளைத்தே
வீறு பெற்ற கிழுமிய
ரசவோம்.

— கவியோகி

---

# தனிநாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மையுடன் வாழ்ந்த ஈழத் தமிழினம் மீண்டும் அதே பெருமையுடன் வாழமுடியுமென்ற நம்பிக்கையை இழந்துவிடாமல் இளைஞர்களும் மாணவர்களும் அதற்காக உழைக்கவேண்டுமென்று கூறியதையும் சுயாட்சியால்தான் தமிழ் மக்கள் தமது மொழி, கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கமுடியுமென்று குறிப்பிட்டதையும் புதிய கட்சி அமைக்கும் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழ் அரசியல் கட்சிகளையும் சேர்ந்துள்ள பலரும் இப்புதிய முயற்சிக்கு ஆதரவுதர முன்வந்துள்ளார்களாம்.

---

# ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், வியா.

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 22-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அடுத்த மாதம் 1ந் தேதி ரதோற்சவமும், 2-ம் திகதி தீர்த்தோற்சவமும நடைபெறும்.

---

# இன்றைய பலன்

[20 - 6 - 68]

ஆனி மீ 7 உ

வியாழக்கிழமை

திதி- தசமி இரவு 7-18 வரை மேல் ஏகாதசி.

நட்சத்திரம்- ரேவதி பகல் 7-56 வரை மேல் அசுவினி.

ராகுகாலம் - 1-24—2-54

சுபநேரம் - 7-24—8-54

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு உத்தியோகஸ்தர்களுக்கு கவலையைக் கொடுக்கும். கடமையில் கவனம்வேண்டும் வணிகத் துறையில் மந்தநிலை. சிறுவர்களுக்கு கிருமிப்பிணி. பிரசவத் தாய்மார்களுக்கு சுகாதாரம்வேண்டும். காதல்விவகாரம் தோல்வியைக் கொடுக்கும்.

மேஷம்- வாழ்க்கையில் புயல் வரவில் தாமதம்.

ரிஷபம்- வெள்ளிப் பணம் துள்ளும் வேண்டியது கிடைக்கும்.

மிதுனம்- தூக்கம் கெடும் துன்பம அணைக்கும்.

கடகம்- கல்வி நலன் அறிஞர்கள் ஆதரவு.

சிம்மம்- இன்பம் பெருகும இனசன மகிழ்ச்சி.

கன்னி- கழுகுப்பார்வை கவலைகள் தாக்குதல்.

துலாம்- குடும்பத்தில் கொண்டாட்டம் குதூகல மிகுதி.

விருச்சிகம்- நம்பிக்கை மோசடி நஷ்ட மடைதல்.

தனுசு- பிதாவழிச்சுகம் கீர்த்தியுண்டு.

மகரம்- இருப்பிடமாற்றம் எண்ணியது கிடைக்கும்.

கும்பம்- காரியம் கைகூடும் சௌக்கியம் உண்டு.

மீனம்- தொல்லைகள் பெருகும் சிந்தனைப்புதிர்.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் இளங்கோவில் [illegible] 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 1968-ம் ஆண்டுஜூன் மாதம் 20-ந்திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org